மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் குழு வறட்சி தாக்குகின்ற நேரத்தில் வாரத்திற்கு ஒருமுறை கூட வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. அதற்குப் பிறகு, ஓரளவிற்கு மழை பெய்து நிலைமை சீரடைந்ததற்குப் பிறகு, மாதந்தோறும் இக்குழு கூடலாம் என்று தெரிவிக்கப்பட்டது. எல்லா மாவட்டங்களிலும் அந்தக் குழுக்கள் கூடி, பரிந்துரைகளை அனுப்பியுள்ளன. வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றி தனியாக விவரம் வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட வேண்டும்.

கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப் பூச்சியை அழிக்க புதிய திட்டம்.

(163—வினா எண். 21535) திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப்பூச்சியை அழிக்க அரசிடம் புதிய திட்டம் எதுவும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரும்புப் பயிரை தாக்கும் குருத்துப் பூச்சியை ஒழிப்பதற்கு அரசிடம் புதிய திட்டமில்லை என்று சொன்னார்கள். விவசாயிகள் கரும்பைப் பயிர் செய்து, பயிர் முளைக்க ஆரம்பிக்கின்ற காலத்திலே இந்த குருத்துப் பூச்சி தாக்குவதினால், அந்தக் கரும்புப் பயிர்கள் அழிந்து விடுகின்றன. அதைப் போக்குவதற்கு புதிய முறையில் ஏதாவது திட்டங்கள் அல்லது புதிய விதைகள் கண்டுபிடித்து, அதை அரசு அறிமுகப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கரும்புக் கரணைகள் நடும்போது, வயலில் சோகைகளை 10 முதல் 15 செ. மீ. உயரத்தில் பரப்பி வைத்தால் குருத்துப் பூச்சிகளின் தாக்குதல் குறைந்து காணப்படுகிறது என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு சோகை பரப்பபடாத வயல்களில் நட்ட 30-வது நாளில் அசோட்ரின் நுவக்கான், என்டோசல்பான், லின்டேன் அல்லது செவிடால் போன்ற மருந்துகளை பயன்படுத்தலாம் என்ற அறிவுரை தந்திருக்கிறது. ஒட்டுண்ணி மூலம் இடைக்கணுப் புழுக்களைக் கட்டுப்படுத்தலாம் என்ற வகையில் ஒட்டுண்ணி விடும் திட்டம் 21 நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1984 மார்ச் 5]

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப் பூச்சியை ஒழிக்க புதிய திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தப் புதிய திட்டத்தோடு, உற்பத்திக்கு ஏற்றாற்போல் விலை கொடுப்பதோடு, அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்ப எந்த மாதங்களில் இந்தப் பயிரை செய்யலாம், எப்படி செய்யலாம் என்பதையெல்லாம் அறிவிப்பதோடு, அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்ப நிலைமையை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கட்டிடத் தொழிலாளர்கள் அரசிடம் கொடுத்துள்ள கோரிக்கைகள்.

(164— *வினா எண் 9805) திரு. ரா. கிருஷ்ணன், திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கட்டிடத் தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை அரசிடம் கொடுத்துள்ளனரா ?

(ஆ) அதன் மீது அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஒரு விவர அறிக்கை ** அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுகூட சமீபகாலத்தில், இந்தக் கட்டிட தொழிலாளர்கள் பல்வேறு சங்கங்களை ஒருங்கிணைத்து, பல்வேறு வகையான போராட்டங்களை நடத்தி, அரசுக்கு ஒரு மகஜரக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் அனுப்பியுள்ள கோரிக்கைகள் எத்தனை? அதிலே அரசாங்கம் உடனடியாக நிறைவேற்றிய கோரிக்கைகள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

** 267-269ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.